**MARUDHAR KESARI JAIN COLLEG FOR WOMEN, VANIYAMBADI**

**PG & RESEARCH DEPARTMENT OF TAMIL**

**e-Notes (Study Material)**

**I MA TAMIL**

| | |
|---|---|
| **CORE COURSE : பக்திஇலக்கியம்** | **CODE :** 24PTAC21 |

## Unit 1 – காரைக்கால் அம்மையார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர்

## Learning Objectives

தமிழின் பக்தி இலக்கிய வரலாற்றையும் வளத்தையும் அறிதல்.

சைவ இலக்கியங்கள் வழி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

வைணவ இலக்கியங்களின் வலி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

பிற்கால பக்தி இலக்கியப் போக்கினை உணரும் வகையில் அருணகிரிநாதர் தாயுமானவர் ராமலிங்க அடிகளார் ஆகியோரின் ஆளுமைகளை கண்டறிதல்.

இஸ்லாமின் கிருத்துவ பக்தி இலக்கிய போக்கை உலக சமயப் போக்கு நிலைப்பாடல் வழி கற்றல்.

## Course Outcomes

தமிழின் பக்தி இலக்கிய புலத்தில் தேர்ந்த புலமைப் பெறல்.

**OVERVIEW**

**காரைக்கால் அம்மையார், திருநாவுக்கரசர்,**

**திருஞானசம்பந்தர்**

- காரைக்கால் அம்மையார் – பதினோராம் திருமுறை அற்புதத் திருவந்தாதி முதல் 10 பாடல்கள்.
- திருநாவுக்கரசர் – திருவதிகை பதிகம்– 1 முதல் 10 பாடல்கள்.
- திருஞானசம்பந்தர் – இரண்டாம் திருமுறை கோளறு பதிகம் 1 முதல் 10 பாடல்கள்

## காரைக்கால் அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதி

## காரைக்கால் அம்மையார் பற்றி குறிப்பு:

மெய்யறிவு கைவரப் பெற்ற காரைக்கால் அம்மையார் முதன்முதலாகப் பாடிய அருளியது இவ் அற்புதத்திருஅந்தாதிதியே என்பர் அற்புதத் திருவந்தாதி புதுமையான பேர்க்குடையது. இவ் அந்தாதியின் சிறப்பை நோக்கியே சான்றோர் இவ் அந்தாதிக்கு அற்பு திருவந்தாதி என்று பெயர் கொடுத்தருளினர் இவ்வந்தாதி ஓதுவதற்க்கு இனிமையும் எளிமையும் உடையது. அறிதற்கரிய சிவஞானத்தின் இயல்பாக தெளிவாக விளக்குவது. மெய்யன்போடு ஓதுவோர் உள்ளத்தை இவ் வந்தாதி உருக்கும் இயல்புடையது.

அம்மையார் தாம் பெற்ற திருவருள் மெய்யறி வினைத் தன்மை நிலையில் வைத்து உலகத்தார்க்கு அறிவுறுத்தம் பாடலக்ளும் தம்மைப் போன்ற அடியார்களுடைய சிவபெருமானுடைய அருட்கோலங்களையும் திருவருள் செயல்களையும் எண்ணி சிவபிரானை முன்னிலைப் படுத்தி அழைத்து உரையாடி மகிழும் பாடல்களும் அனைவருக்கும் இன்பத்தை அளிப்பன.

## திருச்சிற்றம்பலம் நீலகண்டன்

**பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்**

**சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் நிறந்திகளும்**

**மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே**

**எஞ்ஞான்றும் தீர்ப்பது இடர்.**

எம்பெருமான் தேவர்கள் வணங்கிய உடனே அவர்களுக்கு அருள் செய்து கருமை நிறம் பொருந்திய கண்டத்துவானோர் பெருமானாக நிற்கும் நீ நான் இவ்வுலகில் தோன்றி மொழிபயின்ற பின்னெல்லாம் உன் திருவடி பேற்றில் அன்பு மிகுந்து நின் சேவடியே சேர்ந்தேன் என் பிறவித் துன்பத்தை எப்போது தீர்க்கப் போகிறாய்.

**அன்பு அறாது**

**இடர்களையா ரேனும் எமக்கிரங்காரேனும**

**படரும் நெறிபணியாதேனும் சுடருருவில்**

**என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு**

**அன்பறாதுஎன் நெஞ்சவர்க்கு.**

சிவபெருமான் எம்முடைய இடரைக் களையார் என்றாலும் எம்பால் இரங்காமல் இருந்தார் என்றாலும் நாங்கள் செல்ல வேண்டிய வழியைக் காட்டாராயினும் சோதி வடிவமுள்ள தம் திருமேனியில் எலும்பு மாலை எப்போதும்

நீங்காமல் இருக்கும் கோலத்தோடு ˙தீயைத் திருக்கையிலேந்தி ஆடுகிற எம் தலைவருக்கு என் அன்பு என்றும் அறாது என் நெஞ்சு அவருக்கே உரியது.

**அவருக்கே**

**அவர்க்கே எழுப்பிறப்பும் ஆளாவோம் என்றும்**

**அவர்க்கே நாம் அன்பாவதன்றிப் பவர் சடை மேற்**

**பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்கு**

**ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்.**

அவருக்கே அன்பாவதன்றி கொடி போன்ற சடையின் மேல் துண்டாகத் திங்கள் பிளவைச் சூடுகின்ற அந்தப் பெருமானுக்கு அல்லாமல் வேறு ஒருவர்க்கு ஆளாவது இனி எந்தக் காலத்தும் இல்லை எந்த நாளும் அவருக்கே ஆளாகக் கழஜயும் அன்றி வேறு யாருக்கும் ஆளாகாமலே அந்த நாட்கள் போகும்.

**என்ன காரணம்**

**ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டாற்**

**கேளாதது என்கொலோ!கேள் ஆமை நீளா ஆகம்**

**செம்மையான் ஆகித் திருமிடறுமற்றொன்றாம்**

**எம்மையாட் கொண்ட இறை**

அவன் திருமேனி சிவப்பாகத் தோன்றி அணுகிய நிறமாக இருப்பதைப் போலவே பெருங்கருணை உடையவனைப் போல வலிய வந்து ஆண்டு கொண்டவன் என் அல்லலைத் தானாகவே அறிந்து போக்குவது முறையாக இருக்க நான் பலமுறை முறையிட்டுக் கேளாமல் இருக்கிறான் இரண்டுக்கும் ஒரு பொருத்தம் இருக்கிறது

**பொதுவும் சிறப்பும**

**இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி**

**இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் இறைவனே**

**எந்தாய் என இரங்கும் எங்கள் மேல**

**வெந்துயலம் வந்தால் அது மாற்றுவான்**

பொதுவாக உயிர்க் கூட்டங்'களின் வினைக்கு ஈடாக அவர்களைத் தோற்றுவிக்கும் உடம்பிகிக்றும் பிரித்தும் செயல் புரியும் இறைவன் சிறப்பாகத் தன்னையன்றி வேறுயாரையும் புகலாக அடையாத அன்பர்களைத் துன்பத்தினின்றும் விடுவித்து நலம் அருளுவான் என்ற கருத்தை இந்தப் பாட்டில் காரைக்கால் அம்மையார் வெளியிடுகின்றார்.

**என் நெஞ்சத்தான்**

**வானத்தான் என்பாரும் என்க மற்றும்பர் கோன்**

**தானத்தான் என்பாரும் தாமென்க ஞானத்தான்**

**முன் நஞ்சத் தாலிருண்ட மெய்யோளி சேர் கண்டத்தான்**

**என் நெஞ்சத்தானென்பன் யான்**

முன் நஞ்சை உண்டு அதனால் இருள் கப்பியதைப் போல கருமை நிறம் பெற்ற மொய்த்த ஒளியையுடைய கண்டம் உடையவனாகவே நான் பார்க்கிறேன் வானத்துக்குச் செல்ல வேண்டாம் தேவலோகத்துக்கும் செல்ல வேண்டாம் என் நெஞ்சமாகிய இடத்திலேயே அவனை எப்போதும் தரிசிக்கிறேன் மற்றவர்கள் என்ன சொன்னால் எனக்கு என்ன? நான் பார்ப்பதையே சொல்கிறேன்

**காரணமும் காரியமும்**

**யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்**

**யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் யானே அக்**

**கைம்மாவுரி போர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற**

**அம்மானுக்கு ஆளாயினேன்**

யான் தவமுடையேன் என் நெஞ்சு நல்ல நெஞ்சு:யான் பிறப்பு அறுக்க எண்ணினேன் யான் அந்த யானை உரியைப் போர்த்த நெற்றிக் கண்ணனும் வெண்ணீற்றை அணிந்த பெருமானுமாகிய சிவபெருமானுக்கு ஆளாகி விட்டேன்.

**அவன் அருளின் தன்மை**

**ஆயினேன் ஆள்வானுக்கு அன்றே பெறற்கரியன்**

**ஆயினேன் அஃதன்றே ஆமாறு தூய புனற்**

**கங்கை ஏற்றானோர் பொன்வரையே போல்வான்**

**அனற்கங்கை ஏற்றான் அருள்**

இறைவனுக்கு நான் அடிமை ஆனேன். ஆன அப்பொழுதே யாராலும் மகவாகப் பெறுதற்கு அரியேன் ஆகிப் பிறவித் துயரைக் கடந்து விட்டேன். அஃது அல்லவா புனிதமான புனலையுடைய கங்கையைத் திருமுடியிலே தாங்கியவனும் ஒப்பற்ற பொன் மலையாகிய மேருவைப் போன்ற தோற்ற முடையவனும் அனலை உள்ளங்கையில் தாங்கினவனுமாகிய ஆண்டவன் அருள் இருக்கும்' வண்ணம்?

**9. எல்லாம் அருளே**

**அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்**

**அருளே பிறப்பறுப்பதானால் அருளாலே**

**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்**

**எப்பொருளும் ஆவது எனக்கு**

பிறருக்கெல்லாம் சிறந்த பதவிகளைக் கொடுத்துப் பல வகை உலகங்களை ஆள்விப்பது இறைவன் அருளே பிற்பை அறுத்து முத்தி தருவது ஆனால் நானோ அவன் அருளாலே உண்மையான பொருளைக் காணும் நியமத்தை உடையவள் ஆதலால் அவன் அருளே எனக்கு எல்லாக் காலத்தும் எல்லாப் பொருளும் ஆவது

**10. எனக்கு அரியது உண்டா?**

**எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்**

**மனக்கினிய வைப்பாக வைத்தேன்˙ எனக்கவனைக்**

**கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்**

**உண்டே எனக்கரியது ஒன்று**

என் உயிருக்கு இனிமை தரும் எம்பெருமானாகிய ஈசனை யான் என்றைக்கும் மனத்துக்கு இனிய பெருஞ்செல்வமாகப் பொதிந்து வைத்தேன் அவனையே எனக்கு உரிய பிரானாகக் கொண்டேன் அப்படிக் கொண்டவுடன் நான் மாறாத இன்பத்தைஅடைந்தேன்.

**வினாக்கள்**

1. காரைக்கால் அம்மையார் ஆசிரியர் குறிப்பு?
2. காரைக்கால் அம்மையார் வேறுபெயர்கள்?
3. காரைக்கால் அம்மையார் பக்தி சிறப்பு?
4. காரைக்கால் அம்மையார் திருவிரட்டை மணிமாலை?
5. காரைக்கால் அம்மையார் புராணம்?
6. காரைக்கால் அம்மையார் பெற்றோர்?
7. காரைக்கால் அம்மையார் நூல்கள்?
8. காரைக்கால் அம்மையார் பாடல் விளக்கம்?

**கூற்றாயினவாறு விலக்ககிலீர் -திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பதிக பாடல்**

**பதிக வரலாறு**

திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருள்நீக்கியார். ஆவர் திலகவதியார் என்ற மூத்த சகோதரியிடம் வளர்க்கப்பட்டார். வயிற்று நோயால் துன்பமடைந்த மருள்நீக்கியார் திலகவதியாரிடம் திருநீறு பெற்று அணிந்து வீரட்டானேசுவரரைச்

சரணடைந்தார். கூற்றாயினவாறு விலக்ககிலீர் என்று பன்னரிய பல பாடுபட் மரண வேதனைகள் உற்று அழுது சூலைநோய் நீங்கியது. தமிழகத்தில் முதன்முதலாகச் சிவன் கோயில்களில் உழவாரப் பணியை அறிமுகப்படுத்தியவர். நாவுக்கரசர் என்று குறிப்பிடப்படுகிறார்.

**கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான் அறியேன்**

**ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**

**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட**

**ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

கெடில ஆற்றின் வடக்கரையில் விளங்கும் திருவதிகை என்னும் வீரட்டானத் திருப்பதியில் உகந்தெழுந்தருளியிருக்கும் தலைவனே யான் இப்பிறப்பில் என் அறிவு அறியப் பல கொடுஞ் செயல்களைச் செய்தேனாக எனக்குத் தோன்றவில்லை. அவ்வாறாகச் சூலைநோய் யாருக்கும் நோய்முதல் புலப்படாத வகையில் என் வயிற்றினுள் குடலோடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டிச் செயற்படாமல் மடக்குதலால் அடியேன் அவ்வலியைப் பொறுக்க இயலாதேனாக உள்ளேன். கூற்றுவனைப் போல அந்நோய் அடியேனைத் துன்புறுத்தும் செயலை நீக்கும் ஆற்றலுடையீர் அந்நோயை விலக்கினால் எப்பொழுதும் காளை மீது ஊரும் உம் அடிக்கண் நீங்காமல் மனத்தால் துணிவும் தலையால் தணிவும் மொழியால் பணிவும் தோன்ற வணங்குவேன்.

**நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்**

**வஞ்சம்இது வொப்பது கண்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட**

**நஞ்சாகிவந் தென்னை நலிவதனை நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்**

**அஞ்சேலும்என் னீர்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே என் நெஞ்சத்தை உம்மிடத்திலேயே உறைவிடம் பெறுமாறு பண் படுத்திவிட்டேன். இனி ஒரு பொழுதும் உம்மை நினையாமல் இருக்க மாட்டேன் இச்சூலைநோயைப் போலக்காரணத்தைப் புலப்படுத்தலாம் காரியத்தில் செயற்படும் கொடுநோயை அடியேன் இதுகாறும் அனுபவித்தறியேன். வயிற்றினோடு ஏனைய உள்ளுறுப்புக்களைக் கட்டி அவை செயற்படாமல் மடக்கியிடுவதற்கு விடம் போல வந்து என்னைத் துன்புறுத்தும் நோயை விரட்டியோ செயற்பாடு இல்லாமல் மறைத்தோ என்னைக் காப்பீராக அஞ்சேல் என்று எனக்கு அருளுவீராக.

**பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்**

**துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றாற் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்**

**பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர் பெற்றம்ஏற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்**

**டணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே**

அதிகை அம்மானே உலகப்பற்றுக்களோடு இணைந்து இறந்தவர்களை எரித்த சாம்பலை உடலில் பூசிக் கொள்ள வல்ல பெருமானே காளையை இவர்தலை விரும்புகின்றவரே வெண்தலைமாலை அணிகின்றவரே உம்மை வழிபடுபவர்களுடைய பாவங்களைப்போக்க வல்லீரே இறந்துபட்டவருடைய மண்டை யோட்டில் பிச்சை ஏற்றுத்திரிபவரே உம்மையே பரம்பொருளாகத் துணிந்து உமக்கு அடிமை செய்து அடியேன் வாழக்கருதுதலின் துன்புறுத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவீராக.

**முன்னம்அடி யேன்அறி யாமையினான் முனிந்தென்னை நலிந்து முடக்கியிடக்**
**பின்னைஅடி யேன்உமக் காளும்பட்டேன் சுடுகின்றது சூலை தவிரித்தருளீர**
**தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடன் ஆவதுதான்**
**அன்னநடை யார்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

அன்னம் போன்ற நடை அழகை உடைய இளமகளிர் நிறைந்த அதிகை எம்மானே இதற்குமுன் அடியேன் உம்மைப் பரம்பொருளாக அறிந்து உம்

தொண்டில் ஈடுபடாமையால் தேவரீர் அடியேனை வெகுண்டமையால் சூலைநோய் என்னை வருத்திச் செயற்பட முடியாமல் செய்யவே அதன் நலிவுக்கு ஆளாகிய பின்னர் அடியேன் உமக்கு அடிமையாகி விட்டேன்.அடியேனை வருத்தும் சூலை நோயைத் தவிர்த்து அருளவேண்டும். மேம்பட்டவர்களது கடமை தம்மைச் சரணமாக அடைந்தவர்களுடைய வினையைப் போக்குவது அன்றோ!

**காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால் கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி**

**நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்**

**வார்த்தையிது வொப்பது கேட்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட**

**ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே**

ஆரவாரித்துப் பெருகும் கெடிலக் கரையிலமைந்த அதிகை வீரட்டானைப் பெருமானே குளத்தில் பிறர் இறங்காமல் பாதுகாத்து செயற்படுபவர் தம் காவலில் சோர்வு பட்டமையால் கரையில் நின்றவர்கள் இக்குளத்தின் ஆழத்தைக் கண்டு அனுபவிப்பாயாக என்று ஆழமான குளத்தில் விழுமாறு தள்ளிவிட அக்குளத்தில் ஆழத்தில் நிலையாக நீந்திக் கொண்டிருக்கும் வழிமுறை ஒன்றும் அறியாதேனாகிய அடியேன் சூலைநோய் வயிற்றோடு ஏனைய உள் உறுப்பக்களைக் கட்டி என்னைச் பெயற்படமுடியேனாகச் செய்ய பெருமானாகிய நீயே எல்லாவினைகளையும் போக்கி அருளுவாய் என்றவார்த்தையை இதற்குமுன் கேட்டு அறியாதேனாய் நாளை வீணாக்கினேன.

**சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**

**நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்**

**உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய**

**அலர்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே**

**அதிகை அம்மானே இறந்தவர் மண்டை**

யோட்டில் பிச்சை எடுத்துத் திரியும் பெருமானே என் உடலின் உள்ளாய் வருத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவாயா இனி அபிடேகத்தீர்த்தத்தையும் பூவையும் உனக்கு சமர்ப்பிப்பதனை மறவேன் தமிழோடு இசைப்பாடலை மறவேன் இன்புறும் பொழு திலும் துன்புறும் பொழுதிலும் உன்னை மறவேன் உன் திருநாமத்தை என் நாவினால் ஒலிப்பதனை மறவேனாய் இனி இருக்கிறேன்.

**உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும் ஒருவர்தலை காவல் இலாமையினால்**

**வயந்தேஉமக் காட்செய்து வாழலுற்றால் வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்**

**பயந்தேயென் வயிற்றின் அகம்படியே பறித்துப்புரட் டிஅறுத் தீர்த்திடநான்**

**அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

அதிகை அம்மானே அடியேனுக்குத் தலைவராக இருந்து அடியேனை நெறி பிறழாமல் காப்பவர் ஒருவரும் நும்மை யல்லாது இல்லாத காரணத்தினால் மனையிலிருந்து வாழும் இல்லற வாழ்க்கையிலும் அதற்கு வேண்டியதாய் நன்னெறியில் ஈட்டப்படும் பொருள் தேடும் செயலிலும் நீங்கினேன் என் வயிற்றினுள்ளே யான் அஞ்சுமாறு குடலைப் பறித்தெடுத்துப் புரட்டி அறுத்துச் சூலைநோய் உள் உறுப்புக்களை இழுக்க அடியேன் தாங்க முடியாதவனாகி விட்டேன். இனி உமக்குத் தொண்டனாகி நான் வாழக்கருத்தினால் அதற்கு ஏற்ப என்னைத் துன்புறுத்தும் சூலைநோயைப் போக்கி அருளுவீராக.

**வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன் வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்**

**சலித்தால்ஒரு வர்துணை யாருமில்லைச் சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்**

**கலித்தேயென் வயிற்றின் அகம்படியே கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன**

**அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

அதிகை அம்மானே வெண்ணிறச் சங்கினால் ஆகிய குழை என்னும் காதணியை அணிந்துள்ள பெருமானே அடியேன் மனத்தில் வஞ்சனை ஒன்றும் இல்லாமையினால் மனையின்கண் மகிழ்ந்து வாழும் வாழ்க்கையைக் காய்தேன் சூலை நோய் அடியேன் வயிற்றகத்தே செருக்கிக் கலக்கி வயிற்றின் பகுதிகளை மயக்கிக் கைக்கொண்டு துன்புறுத்துதலால் அடியேன் உயிர் வாழ்தலை வெறுத்து விட்டேன் வருந்தும்போது அடியேனுக்குத் துணையாவார் உன்னை தவிர வேறு யாரும் இல்லை .அடியேனை நோயினின்றும் காத்தருள்க.

**பொன்போல மிளிர்வதொர் மேனியினீர் புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்**

**துன்பேகவ லைபிணி யென்றிவற்றை நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்**

**என்போலிகள் உம்மை யினித்தெளியார் அடியார்படு வதிது வேயாகில்**

**அன்பேஅமை யும்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

அதிகை அம்மானே பொன்னார் மேனியினீர் முறுக்குண்ட செஞ்சடையீர் கலைகுறைந்த பிறையை உடையீர் துன்பம் கவலை பிணி என்னும் இவை அடியேனை அணுகாமல் அவற்றை விரட்டுதலையும் மறைத்தலையும் செய்யீராயின் அடியேனைப் போன்றவர்கள் இப்பொழுது உங்களைத் துன்பம் துடைக்கும் பெருமானாராகத் தெளியமாட்டார்கள் எனினும் உங்கள் அன்பே எங்கள் துயர்துடைத்து எங்களை அமைவுறச்செய்யும்

**போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல் புறங்காடரங் காநட மாடவல்லாய்**

**ஆர்த்தான் கன்றனை மால்வரைக்கீழ் அடர்த்திட் டருள்செய்த அதுகருதாய்**

**வேர்த்தும்புரண் டும்விழுந் தும்எழுந்தால் என்வேதனை யான விலக்கியிடாய்**

**ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

ஆரவாரித்து நிரம்பும் நீரைஉடைய கெடிலக் கரையிலமைந்த திருவதிகை வீரத்தானத்து உகந்தருளி உறையும் அம்மானே!பண்டு ஓர் யானையின் உதிரப் பசுமை கெடாத தோலைப் போர்த்தவனே சுடு காட்டையே கூத்தாடும் அரங்காகக் கொண்டு கூத்து நிகழ்த்துதலில் வல்லவனே ஆரவாரித்துக் கயிலைமலையைப் பெயர்க்க முற்பட்ட இராவணனை அப்பெரியமலையினட கீழ் நசுக்கிப்பின் அருள் செய்த அதனை நினைத்துப்பார்த்து வியர்த்தும் புரண்டும் விழுந்தும் அடியேன் சூலை நோயினால் அநுபலிக்கும் துன்பங்களை நீக்கி அருளுவாயாக.

**வினாக்கள்:**

1. திருநாவுக்கரசர் குறிப்புகள்?
2. திருநாவுக்கரசர் இயற்பெயர்?
3. திருநாவுக்கரசர் அற்புதங்கள்?
4. திருநாவுக்கரசர் பாடிய முதல் பதிகம்?
5. திருநாவுக்கரசர் சிறப்பு பெயர்கள்?
6. திருநாவுக்கரசர் எந்த நோயால் துன்பம்அடைந்தார்?

## கோளறு பதிகம் (1-10)

- திருஞான சம்பந்தர்

**<u>நூல் குறிப்பு</u>**


- ❖ மதுரை பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறன் சமண மதத்தில் பற்று கொண்டு மற்ற சமயங்களைப் புறக்கணித்து வந்தார். அவர் மனைவி மங்கையர்க்கரசியார் சைவ சமயத்தில் பற்று கொண்டிருந்தார்.
- ❖ சமணர்களின் அடாத செயல்களால் நாட்டில் குழப்பங்கள் நிலவ, அதைத் தடுக்கும் பொருட்டு திருஞான சம்பந்தர் மதுரைக்கு எழுந்தளி சைவம் தழைக்கவும் நாட்டில் நல்லாட்சி நிலவவும் அழைப்பு விடுத்தார்.

திருஞான சம்பந்துரும், திருநாவுக்கரச பெருமானும் அப்போது திருமுறைக்காட்டில் இருந்தனர்.

❖ மதுரையம்பதி அரசியாரின் வேண்டுகோளை ஏற்று திருஞானசம்பந்தர் மதுரை செல்ல விரும்பி திருநாவுக்கரசரிடம் விடை பெறச்சென்றார். திருநாவுக்கரசரோ, அச்சமயம் நிலவிய கோள்களின் அமைப்பும் போக்கும் தீமை பயம்கும் என்று கூறி சம்பந்தரின் பயணத்தை ஒத்திப்போடச் சொன்னார்.

❖ சகலத்துக்கும் தலைவனான நம் ஈசன் துணை இருக்கையில், நாளும் கோளும் என்ன செய்துவிட முடியும். ஈசனின் அடியாருக்கு அவை நன்மையே செய்யும். கவலை வேண்டாம். என்று கூறி கோளறு பதிகம் பாடினார். பதிகப் பயனுடன் சேர்த்து மொத்தம் பதினொரு பாடல்கள் கொண்ட இந்த கோள்களின் தீவினையை நீக்கும் இந்தப் பாடல்கள் சிறந்த பரிகாரப் பாடல்களாக விளங்குகின்றன.

<u>ஆசிரியர் குறிப்பு</u>



## திருஞானசம்பந்தர்

- ❖ திருஞான சம்பதரின் இயற்பெயர் ஆளுடைப்பிள்ளை
- ❖ பெற்றோர் சிவபாத இருதயர் – பகவதி அம்மையார்
- ❖ அந்தணர் குலம்
- ❖ பிறந்த ஊர் சீர்காழி, இதற்குத் தோணிபுரம், பிரமபுரம், வேணுபுரம் என்ற பெயர்களும் உண்டு.
- ❖ இவரின் வேறுபெயர் 'பரசயக்கோளரி'
- ❖ சமயக் குரவர்கள் நால்வருள் முதலாவதாகக் குறிக்கப்படுபவர்.
- ❖ தேவாரத்தின் முதல் நூலைப் பாடியவார்.
- ❖ இவரது பாடல்கள் 1, 2, 3 ஆம் திருமுறைகளாகத் தொடுக்கப்பட்டுள்ளன.
- ❖ இரண்டாம் திருமுறையில் திருமயிலாப்பூர் பதிகம் (சென்னை) இடம் பெற்றுள்ளது.
- ❖ பாடியவை 16 ஆயிரம் பதிகங்கள், கிடைத்தவை 384 பதிகங்கள்.
- ❖ கிடைத்த பாடல்கள் 3840. இதில் கருத்து வேறுபாடு உண்டு
- ❖ பதிகம் - தெய்வத்தைப் பற்றிப் பாடுகின்ற பத்துப் பாடல்களின் தொகுதி, பாடினோன்பற்றிய செய்திகளை 11-ம் பாடலாகக் கூறுவதுண்டு.
- ❖ 23 பண்களில் (இசைகளில்) பாடியுள்ளார்.
- ❖ 220 பதிகளுக்குச் (ஊர்களுக்குச்) சென்று இறைவனை வழிபட்டவர்.

**<u>முக்கிய நிகழ்ச்சிகள்</u>**

- சீர்காழியில் மூன்று வயதில் உமையால் கொடுத்த ஞானப்பாலை உண்டவர்.
- திருஞான சம்பந்தரின் பாடல்களை யாழில் பாடியவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர்.
- தருமபுரத்தில் ( நீலகண்டர் பிறந்த ஊர் ) யாழ்முறி பதிகம் பாடினார்.

- திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் சந்தித்த இடம் திருச்செங்காட்டான்குடி
  திருநீலநக்க நாயனார் சந்தித்த இடம் திருப்புகலூர்
  முருகநாயனார் சந்தித்த இடம் திருப்புகலூர்
  ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் முதன்முதலில் சந்தித்த இடம் திருப்புகலூர்
  குங்கிலியக் கலய நாயனார் சந்தித்த இடம் திருக்கடவூர்
- பாம்புதீண்டிய வணிகனின் விடம் தீர்த்த இடம் திருமருகல்
- ஆண் பனையைப் பெண் பனையாக்கிய இடம் திருவோத்தூர்
- சிவநேச செல்வரின் மகளான பூம்பாவைக்கு உயிர் கொடுத்த இடம் திருமயிலை
- மக்களின் குளிர்சுரத்தை நீக்கப் பதிகம் பாடிய இடம் செங்குன்றூர்.
- திருமறைக்காடு ( வேதாரணியம் ) கோயில் கதவு திறக்கவும் மூடவும் பதகம் பாடியவர்
- சமண மதத்தைப் போற்றிய கூன்பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியும் அமைச்சர் குலசசிறையாரும் வேண்ட மதுரை வந்தவர்
- மதுரையில் சமணரைப் புனல் வாத்திலும் அனல் வாத்திலும் வென்று பாண்டியனைப் சைவனாக்கியவர்
- கூன் பாண்டியனின் வெப்பு நோயைப் போக்கியவர் கூன் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் ஆனான்
- இவர் வைகையாற்றில் இட்ட ஏடு கரையேறிய இடம் திருஏடகம்
- இவரின் சிவிகையைத் ( பல்லக்கு ) திருநாவுக்கரசர் சுமந்த இடம் திருப்பூந்துருத்தி

- அப்போது திருநாவுக்கரசருக்கு 'அப்பர்' என்ற பெயரைக் கொடுத்தவர் திருஞானசம்பந்தர்

**சிறப்புகள்**

- பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றியவர்
- யாழ்முரி இவருக்கு மட்டுமே உரியது
- இயற்கையை அதிகமாகப் பாடியவர்
- ஆதிசங்கரர் தம் நூலான சௌந்தர்யலகரியில் திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று புகழ்ந்துள்ளார்
- முருகனின் அவதாரமாகப் போற்றப்படுபவர்
- பெரியபுராணத்தில் "பிள்ளைபாதி; புராணம் பாதி"
- நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று புகழ்ந்தவர் சுந்தரர்
- 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் தோன்றியவர்' என்று புகழ்ந்தவர் சேக்கிழார்.

**கோள்களால் ஏற்ப்படும் நன்மைகள்:**

1. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பொருள்: புலித்தோலை தோளில் அணிந்த விஷமுண்ட கழுத்தைக் கொண்ட , திங்களையும் கங்கையையும் தலைமேல் அணிந்த ஈசனின் நன்மையே செய்யும்.

**அணிந்துள்ள மாலைகள்:**

2. எனபொரு கொம்பொடாமை இவைமார்பு இலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பத ஒன்றொழு ஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பொருள்: எலும்பும் கொம்பும் மார்பில் அணிந்து விடையேறி , மத்தமாலை , கங்கை சூடிய ஈசனை வணங்கும் அடியார்களுக்கு , 27 நட்சத்திரங்களும் , எல்லா நாள்களும் மிகச் சிறந்த நன்மையே புரியும்.

**அதிதேவதைகளின் நன்மைகள்:**

3. உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் இவர்க்கு மிகவே.

பொருள்: பவள மேனியனும் ஒளிமிக்க நீறு அணிந்தவரும் , சக்தியோடு விடைமீது ஏறிவரும் கொன்றை திங்கள் அயிந்த நம் ஈசனை வணங்குபருக்கு , திருமகள் , துர்கை , அஷ்டதிக்கு பாலகர்கள் , பூமியின் அதிதேவதை ஆகியோர் நன்மையே புரிவர். குறைவற்ற செல்வமும் வந்து சேரும்.

**<u>எமன் ஆகியோரால் ஏற்ப்படும் நன்மைகள்:</u>**

4. மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
   மறையோதும் எங்கள் பரமன்
   நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
   உளமே புகுந்த அதனால்
   கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
   கொடு நோய்களான பலவும்
   அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
   அடியார் அவர்க்கு மிகவே.

பொருள்: பெண்ணை தென்பால் வைத்த பரமன் , கங்கையும் கொன்றை மாலையும் அணிந்தவன். அவனைத் தொழுது ஏத்தும் அடியவருக்கு கூற்றுவன் , அக்னி , காலனின் தூதுவர்கள் , கொடும் நோய்கள் என எதுவும் தீமை வளைவிக்காது மாறாக நன்மையே புரியும்.

**<u>பஞ்ச பூதங்களால் ஏற்ப்படும் நன்மைகள்:</u>**

5. நஞ்சணி கண்டன் எந்மை மடவாள் தனோடும்
   விடையேறு நங்கள் பரமன்
   துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
   உளமே புகுந்த அதனால்
   வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
   மிகையான் பூதம் அவையும் அஞ்சிடு
   நல்ல நல்ல அவை நல்ல நல்ல
   அடியார் அவர்க்கு மிகவே.

பொருள்: நஞ்சுண்ட நீலகண்டன் , அன்னையோடு விடையேறி வரும் ஈசன் , தலையில் வதன்னி கொன்றை அணிந்த பரமனை வேண்டுவோருக்கு ,

அரக்கர்களாலும் , பஞ்ச பூதங்களாலும் , எந்த இடர்ரும் நேராது. நன்மையே விளையும்.

**மிருகங்களால் ஏற்ப்படும் நன்மை:**

6. வாள்வரிய தளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பொருள்: எளிய ஆடை அணிந்தவரும் கங்கை கொன்றை வன்னி அணிந்தவருமான ஈசனைப் பணிவாருக்கு சிங்கம் புலி கொல்லும் யானை பன்றி கொடும் நாகம் கரடி போன்ற எதன்லும் இடர் நேராது. நன்மையே விளையும்.

**நோய்களால் ஏற்ப்படும் நன்மைகள்:**

7. செப்பளி முலைநல்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையானபித்தம்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவருக்கு மிகவே.

பொருள்: மங்கையை ஒரு பாகமாக ஏற்ற விடையேறும் சுபங்கள் செல்வனை. மதியும் நீரும் தலையில் சுமக்கும் ஈசனை சரண் அடைநடத அடியவருக்கு

வெப்பம் குளிர் வாதம் பித்தம் போன்ற எந்த தன்மையும் இடர் செய்யாது. நன்மையே விளைவிக்கும்.

**ஆழ்கடால் ஏற்ப்படும் நன்மை:**

8. வேள்பட விழிசெய்து அன்று விடைலேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவருக்கு மிகவே.

பொருள்: விமைமேல் எழுந்தருளிய வன்னி கொனிறை மலர் சூடி நிற்கும் ஈசனை வணங்கும் அடியவருக்க ஆணவத்தால் கயிலை தூக்க முயன்ற ராவணனுக்கு வநத துன்பம் போன்ற எதுவும் வந்துவிடாது. மூழ்கினாலும் ஆழ்கடலும் நன்மை செய்யும்.

**தேவர்களால் ஏற்ப்படும் நன்மைகள்:**

9. பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வரு காலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவருக்கு மிகவே.

பொருள்: எல்லாமுமாக நின்ற பல வடிவங்களில் விடைமீது தோன்றும் ஈசன் நீர்மகளோடு எருக்கும் தலையில் சூடியவன் அவனைப் பணிநவாருக்கு நான்முகன்

திருமால் மறைமகள் தேவர் என அனைவரும் நலன் புரிவர். கமலும் மேரு மயலயம் கூட நன்மையே செய்யும்.

<u>**சக்தியோடு நாளும் நன்மை செய்யும் ஈசன்:**</u>

10. கோத்தலர் குழியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
முத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை கிடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அர்க்கு மிகவே.

பொருள்: சக்தியோடு நாளும் நன்மை செய்யும் ஈசன் நிலவையும் சூடிக் கொண்டவன். அவனை வணங்குவோருக்கு புத்தரையும் சமணரையும் வாதில் வெல்லும் நிலையான விபூதி எனும் செல்வம் கிட்டும் அதனால் சொல்லொணாத நன்மைகள் கிட்டும்.

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**:

1. திருஞான சம்பந்தரின் இயற்பெயரை கூறுக?
2. கோளறு பதிகத்தில் சிவபெருமான் அணிந்த மாலைகளாக ஞானசம்பந்தர் கூறுவன யாவை?
3. கோளறு பதிகத்தில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன?
4. ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் முதன்முதலில் சந்தித்த இடம் எது?
5. வேய் என்னும் சொல்லின் பொருள் என்ன?
6. கோள்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்:**

1. திருஞான சம்பந்தரின் முக்கிய நிகழ்ச்சிகள் சிலவற்றை குறித்து எழுதுக?
2. கோளறு பதிகம் குறிப்பு வரைக?
3. "வாள்ளரிய தளதாடை வரி கோவணத்தா்" என தொடங்கும் பாடலின் பொருளினை கூறுக?
4. கோளறு பதிகம் வாசிப்பதன் மூலம் நீங்கும் நோய்கள் யாவை?
5. எவ்வித மிருகங்களால் நன்மை ஏற்ப்படும் என்று ஞானசம்பந்தர் கூறுகிறார்?

**பத்து மதிப்பெண் வினாக்கள்:**

1. கோளறு பதிகம் கட்டுரை வரைக?
2. கோளறு பதிகம் கூறும் செய்திகளை விவரித்து எழுதுக?
3. திருஞானசம்பந்தரின் "கோளறு பதிகம்" கூறும் சிறப்புகளை தொகுத்து எழுதுக?

**மேலும் தகவலுக்கு**

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளி செய்த தேவார பதிகங்கள் திருமுறை 1.2 கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்களால் பார்வையிட பெற்றன. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிடெட் சென்னை முதற்பதிப்பு பிப்ரவரி- 1927.